

சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகம் அரங்கில் நேற்று முன்தினம் (23.12.2024) பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பொது நூலக இயக்ககம் சார்பில் அய்யன் திருவள்ளுவர் சிலை 25 ஆம் ஆண்டு வெள்ளி விழாவை முன்னிட்டு, நடைபெற்ற ஓவியக் கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் பொது நூலகத் துறை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், பள்ளிக் கல்வி துறை இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், பொது நூலக இயக்ககத்தின் இணை இயக்குநர்கள் ச.இளங்கோ சந்திரகுமார், சங்கர சரவணன், சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு தலைவர் கவிஞர் மனுஷ்யபுத்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் தந்தை பெரியாரின் 51வது நினைவு தினத்தை யொட்டி மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான இரா.இராஜேந்திரன் தந்தை பெரியாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட நிர்வாகிகள் ஜி.கே.சுபாசு, மு.கார்த்திகேயன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சி.ராஜேந்திரன், கே.டி.மணி, தாமரைக் கண்ணன், மேயர்.ஆ.ராமச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.அமான், பெ.அசோகன், பகுதி கழக செயலாளர்கள் சி.பிரகாஷ், கே.ஜெய். கேபிள் ராஜா, மணமேடு. மோகன், கே.டி.ஆர். தனசேகரன், சாந்த மூர்த்தி.ஏ.எஸ்.சரவணன். ஆர்.பி.முருகன், சேலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் ரெயின்போ நடராஜன் ஆகியோர் பங்கேற்றனர்.

### உள்கட்டமைப்பு மேம்பாடு

# ஸ்மார்ட் சிட்டி திட்டங்களை முடிக்க எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!

நாமக்கல், டிச. 25 -

உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் ஸ்மார்ட் சிட்டி திட்டங்களை முடிக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ? என மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கேள்வி எழுப்பினார்.



டெல்லியில் நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும, நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு தேசிய உள்கட்டமைப்பு பைப்லைன் (NIP) கீழ் உள்கட்டமைப்பு மேம்பாட்டை துரிதப்படுத்தவும், ஸ்மார்ட் சிட்டி திட்டங்கள் மற்றும் நகர்ப்புற உள்கட்டமைப்பை மேம்படுத்தி, சரியான நேரத்தில் முடிக்கவும், குறிப்பாக பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் மற்றும் குறைந்த வருமானம் பெறும் பிரிவினருக்கான வீட்டுப் பற்றாக்குறை பிரச்சினையை தீர்க்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்து பேசிய ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் டோகன் சாஹு, நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்கள் துறை வழங்கிய தகவலின்படி, தேசிய உள்கட்டமைப்பு பைப்லைன் (NIP) அனைத்து மாநிலங்களாலும் செயல்படுத்தப்படும் பொருளாதார மற்றும் சமூக உள்கட்டமைப்புத் துறைகளில் 100 கோடி ரூபாய்க்கு மேல் பிரவுன் ஃபீல்ட் மற்றும் கிரீன் ஃபீல்ட் உள்கட்டமைப்பு திட்டங்களை இந்தியாவின் யூனியன் பிரதேசங்கள் மற்றும் அரசாங்கத்தின் 22 உள்கட்டமைப்பு அமைச்சகங்கள் இந்தியாவின். NIP திட்டங்கள் இந்திய முதலீட்டு கட்டம் (IIG) போர்ட்டலில் உள்ள (https://indiainvestmentgrid.gov.in/) என்ற தளத்தில் பொது முதலீடு மற்றும் தனியார் நிதியுதவி மூலம் நிதியளிக்கப்படும் நடைமுறைச் சுழற்சியின் உள்கட்டமைப்புத் திட்டங்கள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய உள்கட்டமைப்பு பைப்லைன் கீழ், ஸ்மார்ட் சிட்டிஸ் மிஷன் மூலம் 76,338 கோடி மதிப்பிலான 650 பல்துறை மாற்றும் திட்டங்கள் எடுக்கப்பட்டு, 592 திட்டங்கள் (91%) 71,192 கோடியில் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் முடிக்க ப் பட்டுள்ளன. இது தவிர நீர் சுகாதாரம் மற்றும் சுகாதாரம் (வாஷ்), ஸ்மார்ட் மோட்டார் அல்லாத போக்குவரத்து, பொது சைக்கிள் பகிர்வு, ஸ்மார்ட் எனர்ஜி, பொது இடங்கள், பொருளாதாரம் மற்றும் சமூக உள்கட்டமைப்பான ஸ்மார்ட் வகுப்பறைகள், டிஜிட்டல் லைப்ரரிகள், சுற்றுச்சூழல் மேம்படுத்த கட்டுப்பாட்டு மையங்கள் மற்றும் நகர்ப்புற சேவைகளை திறம்பட நிர்வகிக்க டிஜிட்டல் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தகவல் வழங்குவது,

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ஸ்மார்ட் சிட்டிஸ் மிஷன் திட்டத்தின் கீழ் திட்டங்களின் முன்னேற்றத்தை விரைவுபடுத்த மதிப்பாய்வு கட்டமைப்பைக் கொண்டுள்ளது. தேசிய மற்றும் மாநில அளவில், தலைமைச் செயலர் தலைமையிலான வழிகாட்டுதல் குழு மற்றும் வாரியங்களில் உள்ள நியமன இயக்குனர்கள் மூலமும் பணிகள் கண்காணிக்கப்படுகிறது. தொடர்ந்து மாநிலங்களில் 100 ஸ்மார்ட் நகரங்களில் மதிப்பீடு செய்து, விதிமுறைகளைப் பின்பற்றி இந்திய நகர்ப்புற மேம்பாட்டிற்கான பணிகள் மேற்கொண்டுள்ளப்பட்டு வருகிறது

பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா நகர்ப்புற திட்டத்தின் கீழ் ஜூன் 25, 2015 முதல் விரிவுபடுத்தப்பட்டு நாடு முழுவதும் உள்ள தகுதியான நகர்ப்புற பயனாளிகளுக்கு குறிப்பாக பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் மற்றும் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீட்டை வழங்குவதற்கான திட்டமாகும், இதில் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் செயல்படுத்தும் ஏஜென்சிகள் மூலம் அந்தந்த அதிகார வரம்புகளுக்கு உட்பட்டு, தகுதி அளவுகோல்களின் அடிப்படையில் தேவை கணக்கெடுப்பை நடத்தி மாநில / யூனியன் பிரதேச அரசுகளின் பரிந்துரைகளின் பேரில் 118.64 லட்சம் வீடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன, அவற்றில் 114.23 லட்சம் தரைமட்டமாக்கப் பட்டுள்ளன, மேலும் 88.32 லட்சத்துக்கும் அதிகமான வீடுகள் 02.12.2024 அன்று முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.

### பொங்கல் திருநாளில் தேர்வுகள் நடத்துவதா?

# தேசிய தேர்வு முகமை நடத்தும் யு.ஜி.சி. நெட் தேர்வு தேதிகளை மாற்றிடுக!

## உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் – ஒன்றிய கல்வி அமைச்சருக்கு கடிதம்!

**சென்னை, டிச. 25 –**

**ஒன்றிய கல்வி அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய தேர்வு முகமை (NTA) அதன் UGC NET தேர்வை பொங்கல் திருநாள் நாட்களில் நடத்தப்படுவதை மாற்றியமைத்திட வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, ஒன்றிய கல்வி அமைச்சர் அவர்களுக்கு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் கடிதம் எழுதியுள்ளார்.**



இக்கடிதத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளதாவது:

ஒன்றிய கல்வி அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய தேர்வு முகமை (NTA) அதன் UGC - NET தேர்வை 3 ஜனவரி 2025 முதல் 16 ஜனவரி 2025 வரை நடத்தஅறிவித்துள்ளது.

உலகம் முழுவதும் உள்ள அனைத்துத் தமிழ் சமுதாய மக்களாலும் கொண்டாடப்படும்விழா பொங்கல் திருநாள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த விழா ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 13 முதல் ஜனவரி 16 வரை நான்கு நாட்கள் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு 2025, 13 ஆம் தேதி போகி பண்டிகையும், 14 ஆம் தேதி பொங்கல் (தமிழ்ப் புத்தாண்டு) பண்டிகையும், ஜனவரி 15 ஆம் தேதி திருவள்ளுவர் தினமாகவும் (மாட்டுப் பொங்கல்) ஜனவரி 16 ஆம் தேதிஉழவர் திருநாள் / காணும் பொங்கலாகவும் கொண்டாடப்படுகிறது.

**3000 ஆண்டுகளுக்கும் மேலான கலாச்சாரம்!**

இந்த நான்கு நாட்களும் உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் பொங்கல் திருநாளை உற்சாகத்துடன் கொண்டாடி மகிழ்வார்கள். இந்த விழாவை முன்னிட்டு தமிழக அரசு ஏற்கனவே 2025 ஜனவரி 14 முதல் 16 வரை விடுமுறை அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டு விவசாயிகளின் உணர்வார்ந்த திருநாளாகக் கொண் டாடப்படும் பொங்கல் ஒரு பண்டிகை மட்டுமல்ல, 3,000 ஆண்டுகளுக்கும் மேலான தமிழர்களின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் அடையாளமாகும்.

பொங்கல் திருநாளைப் போலவே ஆந்திரா மற்றும் தெலுங்கானாவிலும் மகர சங்கராந்தி விழா ஜனவரி மாதத்தில் கொண்டாடப்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பொங்கல் விடுமுறை நாட்களில் நெட் தேர்வு நடத்தப்பட்டால், மாணாக்கர்கள் இத்தேர்வுக்கு தயாராவதற்கும் எழுது வதற்கும் தடை ஏற்படும்.

மக்களவை உறுப்பினர் சு.வெங்கடேசன் விடுத்த வேண்டு கோளின்படி, பொங்கல் திருநாளை முன்னிட்டு, ஜனவரி 2025க்கான பட்டயக் கணக்காளர்கள் அறக்கட்டளைத் தேர்வு மாற்றியமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

எனவே, தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களில் உள்ள மாணவர்கள் மற்றும் கல்வியாளர்கள் பாதிக்கப்படுவதை தவிர்த்திடும் வகையில் பொங்கல் திருநாள் விடுமுறை நாட்களில்நடத்தப்படுவதாக அறிவிக்கப் பட்டுள்ள யுஜிசி நெட் தேர்வு மற்றும் பிற தேர்வுகளை வேறு தேதிகளில் நடத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு, ஒன்றிய கல்வி அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு

திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த சாவல்பூண்டி மா.சுந்தரேசன் அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 23.12.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.




கண்ணீர் அஞ்சலி...

புதுக்கோட்டை மாநகராட்சி மேயர்
திருமதி திலகவதி செந்தில்குமார்
அவர்களின் கணவர்

தி.மு.க. மாநகரச் செயலாளர்
ஆ.செந்தில் (எ) செந்தில்குமார்

அவர்கள் 23.12.2024 அன்று இயற்கை எய்தினார் அன்னாரின் இறுதி ஊர்வலம் நல்லடக்கம் 24.12.2024 அன்று காலை 9 மணியளவில் அவர்களது இல்லத்தில் இருந்து நடைபெறும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆழ்ந்த வருத்தங்களுடன்...

K.K.செல்லபாண்டியன் M.Com., BL.,
மாவட்ட கழக செயலாளர்

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க

KTR 9944007370